18.04.2026 O.S.327/2019 பி.வா.சா.1 முருகையா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் மறுக்காலங்குளத்தில் குடியிருக்கிறேன். நான் இந்த வழக்கில் எதிர்வழக்குரை என்ன கூறி தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் இருந்து சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளதாக கூறியுள்ளேன். புல எண். 205/1பி–க்கு எதிர்வாதம் செய்கிறேன். புல எண். 205/1பி என்பது முன்பு புல எண்.205/1A என ஒரே புல எண்ணில் இருந்தது என்றால் தெரியாது. புல எண்.205/1 ஆக இருந்த போது மொத்த பரப்பு எவ்வளவு இருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. புல எண். 205/1 என்பது ஆதியில் யார் பெயருக்கு பட்டா இருந்தது அவர்களது வாரிசுகள் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. புல எண். 205/1க்கான ஆதிபாத்தியஸ்தர்கள் அவர்களது இடத்தை எவ்வாறு பிரித்து கொண்டார்கள் என தெரியுமா என்றால் தெரியாது. புல எண். 205/1ல் உள்ள ஆதிபாத்தியஸ்தர்கள் பிரிவினை செய்து கொண்டதை பற்றி நான் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் ஆட்சேபனை செய்யவில்லை. வாரிசுகளிடம் கிரையம் வாங்கியுள்ளேன். புல எண்.205/1 என்பது ஆதியில் பெருமாள் என்பவருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றால் தெரியாது. பெருமாள் என்பவருக்கு பொன்னுபெருமாள், அருணாசலம், வெளியப்பன், சுப்பையா ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி நபர்களிடம் நான் யார் வாரிசுகளிடம் இருந்து கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சுப்பையா தேவர் மகன் வெள்ளப்பாண்டி என்பவரிடம் இருந்து நான் கிரையம் வாங்கியுள்ளேன். சுப்பையா தேவருக்கு அவரது பாகபடி 1 ஏக்கர் 41 செண்டு என்றால் தெரியாது. நான் சொத்தை கிரையம் வாங்கும் போது நான் வில்லங்கம் எடுத்து பார்த்து தான் வாங்கினேன். நான் கிரையம் வாங்கின போது புல எண். 205/1ல் சுப்பையா தேவர் வாரிசுகள் எத்தனை நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்பதை பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதில் யார் பெயரும் இல்லை. நான்

வில்லங்கம் எடுத்து பார்த்த ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. புல எண். 205/1ல் எந்த வில்லங்கத்திற்கான பதிவுகளும் இல்லை. வெள்ளப்பாண்டி சரியான சொத்தை கொடுத்தாரா அல்லது அவருக்கு வேறு சொத்துக்கள் இருந்ததா என்பதற்கு நான் வேறு எந்த ஆவணமும் பார்க்க வில்லை என்றால் சரிதான். எந்த ஆவணத்தை பார்த்து நான் கிரையம் வாங்கினேன் என்றால் பட்டாவில் அவரது பெயர் இருந்ததை பார்த்து வாங்கினேன். சுப்பையா தேவரின் வாரிசுகள் அனுபவத்தில் இருந்தார் என்பதற்கு பட்டாவை தவிர்த்து வேறு எந்த ஆவணங்களை பார்த்தேன் என்றால் பட்டாவை மட்டும் தான் பார்த்தேன். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு வெள்ளப்பாண்டி எவ்வளவு பாகம் ஒதுக்கப்பட்டது என்பதை உறுதி செய்து கொண்டு வாங்கினேனா என்றால் 41–1/2 செண்டு பாகமாக கிடைத்ததாக சொன்னதால் வாங்கினேன். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பெருமாள் தேவருக்கு எத்தனை பேர்கள் வாரிசுகள், அவர்களது கொடிவழி பற்றி நேரடியாக தெரியாது என்றும், அது சம்பந்தமான விபரங்கள் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். பெருமாள் தேவரின் வாரிசுகளை பற்றி நான் எந்த ஒரு ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரிதான். என்னை தவிர்த்து யார் யாருக்கு பாகம் உள்ளது என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். முன் அனுபவத்தை பற்றி சுப்பையா தேவரின் வாரிசுகளான 1 முதல் 3 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தால் தான் தெரிய வரும் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அவரது அப்பா வெள்ளபாண்டியன் உயிருடன் இருக்கும்போதே கிரையம் கொடுத்துள்ளது தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தை கிரையம் கொடுக்கவில்லை. வாதிக்கு கிரையம் கொடுத்த நபர்கள் பெருமாள் தேவரின் வாரிசுகளான பொன்னுபெருமாள் வாரிசுகள் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் வேறு சொத்துக்களை கிரையம் கொடுத்துள்ளார்கள். எந்த சர்வே எண்ணில் கிரையம் வாங்கியுள்ளார்கள் என்றால் புல எண். 205/1ல் 4 ஆக பிரித்ததில் ஒரு பாகத்தை

கிரையம் வாங்கியுள்ளார்கள். அவ்வாறு வாதிக்கு கிரையம் கொடுத்த நபர்கள் அந்த சொத்திற்கு உரிமைபட்டவர்கள் என்றால் சரிதான். அவர்கள் கிரையம் வாங்கியது புல எண். 205/1பி என்றால் தெரியவில்லை. புல எண். 205/1பி–ல் மொத்த எவ்வளவு சொத்து உள்ளது என்றால் 2 ஏக்கர் 5 செண்ட் உள்ளது. 2 ஏக்கர் 5 செண்டில் வாதி கிரையம் பெற்ற சொத்தும் உள்ளடக்கம் என்றால் சரிதான். நான் 9.2.2014 ல் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் தான் வா.சா.ஆ 15 என்றால் சரிதான். வா.சா.ஆ 15 ஆவணம் எழுதி கொடுத்த தேதியில் கிரையம் கொடுத்தாக சொல்லும் ராமராசு வகையறாவிற்கு எவ்வித உரிமையும், அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய வெள்ளப்பாண்டி என்பவரை வெள்ளப்பாண்டி என்றும், வெள்ளத்துரை என்றும் அழைப்பார்கள் என்றால் சரிதான். வெள்ளப்பாண்டி தேவர் மற்றவர்களுடன் சேர்த்து 6.09.1973 தேதியில் 1,2 பிரதிவாதிகளின் தந்தையும், செல்லையா தேவரின் வாரிசுகளும் சேர்ந்து வெளியப்பதேவர் என்பவருக்கு பிரிவன்றி செண்டு 25 ஐ கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் இல்லை. வா.சா.ஆ 11 ஆவணம் மூலம் 11.12.1972 ல் ராமு அம்மாளுக்கு எனக்கு கிரையம் கொடுத்த வெள்ளப்பாண்டி தகப்பனார் சுப்பையா தேவர் 1,2 பிரதிவாதிகளுக்கு காப்பாளராக காண்பித்து செண்டு 80 ஐ ராமு அம்மாளுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 5 ஆவணம் மூலம் 29.11.1968 ல் 1,2 பிரதிவாதிகளின் தந்தை இதர பங்காளிகளுடன் சேர்த்து அவருடைய பங்கு 62–1/2 செண்டை ராமு அம்மாளுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. மேற்படி 3 ஆவணங்களின்படி மொத்தம் 1 ஏக்கர் 42–1/2 க்கு அதிகமாக நான் கிரையம் பெற்ற வெள்ளப்பாண்டி தேவரும் அவரது தகப்பனார் சுப்பையா தேவரும் சேர்ந்து கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் இல்லை. சுப்பையா தேவர் வகையறா வீ.கே.புதூர் தாலுகா ராஜபாண்டியில் 35 வருடமாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1972 ல் அவர்கள் அனைத்து

சொத்துக்களை விற்றுவிட்டதால் ராஜபாண்டியில் குடியிருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் இருந்து வாங்கிய கிரைய ஆவணம் மோசடியானது என்றும், ஆள்மாறாட்டம் செய்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்காக நான் வழக்கு நடத்தவில்லை, நான் எனக்காக மட்டும் தான் வழக்கு நடத்துகிறேன் என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த நபர்கள் வழக்கு நடத்த என்னுடன் வரவில்லை என்றால் ராமராசு இறந்துவிட்டார். மற்றவர்கள் வந்தார்கள். 1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்கை மேல்நடத்தவில்லை என்றும், அதனால் தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ1 மறுபயன் இல்லாத மோசடியான ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ1 ஆவணத்தின்படி நான் இடத்திற்கு செல்லும் போது வாதி என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் நான் அவர்களை உள்ளே வரக்கூடாது என நிறுத்தினேன். அவர் புகார் கொடுத்தார். காவல்துறையினர் விசாரணையில் சுப்பையா தேவர் வாரிசுகள் கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றும் அதனால் நீதிமன்றத்தில் சென்று பரிகாரம் தேடி கொள்ள சொன்னார்கள் என்றால் சிவில் வழக்கு என்பதால் நீதிமன்றத்திற்கு செல்ல சொன்னார்கள். நான் வாதி பெற்ற கிரையம் செல்லாது என்றும், உரிமையில்லை என்றோ வாதம் செய்யவில்லை என்றால் அவர் வேறு சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளார். வாதி கிரையம் பெற்ற சொத்து வழக்கில் 1,2 சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளது என்றால் இல்லை. வாதி இரண்டு நபர்களிடம் கிரையம் வாங்கியுள்ளார். அவ்வாறு கிரையம் வாங்கிய சொத்துக்களை 1,2 லக்க சொத்துக்களாக காண்பித்துள்ளார் என்றால் இல்லை. வழக்கு 1,2 சொத்துக்கள் எந்த சொத்து என்பது குறித்து நான் பார்க்கவும் இல்லை என்றால் தெரிந்து கொண்டேன். 7 முதல் 11 பிரதிவாதிகள் புல எண். 205/1ஏ–க்கு அவர்கள் வாங்கிய சொத்திற்கு பட்டா பெற்று அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் இந்த வழக்கு சொத்திற்கு

சம்பந்தம் இல்லை. புல எண்.205/1ஏ–ல் வருகின்ற சொத்தை தான் ராமு அம்மாளுக்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் கிரையம் கொடுத்து தனிபட்டாவாக உள்ளது என்றால் இல்லை. அந்த சொத்து கடற்கரை சொத்திற்கு மேற்கே உள்ளது. 1 முதல் 3 பிரதிவாதிகள் வகையறா ராமு அம்மாளுக்கு கிரையம் கொடுத்து தற்போது 7 முதல் 11 பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றால் இல்லை. புல எண்.205/1பி–ல் எனக்கு கிரையம் கொடுத்த வெள்ளப்பாண்டி வகையறாவிற்கோ, சுப்பையா தேவருக்கோ எவ்வித உரிமையும், அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. நான் வாங்கியுள்ள பி.வா.சா.ஆ1 ஆவணம் செல்லாத ஆவணம் என்பதால் அதை ரத்து செய்வதற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி கிரையம் பெற்ற அளவுவிற்குள் அனுபவம் செய்ய எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் என் இடத்தில் இல்லாமல் இருந்தால் ஆட்சேபனை இல்லை. புல எண்.205/1பி–ல் 5,6 பிரதிவாதிகளுக்கு உரிமையுள்ளது என்றால் இல்லை. வாதி கிரையம் வாங்கி 5,6 பிரதிவாதிகளுடன் சேர்ந்து எல்கைமால் ஒதுக்கி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. என்னை தவிர்த்து 5,6 பிரதிவாதிகளோ, 7 முதல் 11 பிரதிவாதிகளோ வாதியின் அனுபவத்தை ஆட்சேபனை செய்யவில்லை என்றால் வாதி அனுபவத்திற்கு வரவேயில்லை. வாதி அவரது கிரைய ஆவணத்தின்படி பூமியில் அனுபவத்தில் இருக்கிறார் என்றால் இல்லை. நான் வாதிக்கு தான் இடம் இல்லை என சொல்லுகிறேனா என்றால் எனக்கு மட்டும் 42 செண்டு உள்ளது என சொல்லுகிறேன். வாதியின் அனுபவத்தை பற்றியும், உரிமைமூலத்தைபற்றி ஆட்சேபனை செய்வதற்கு எனக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. வாதியின் அனுபவம் சரியானது என்பதால் இதர பிரதிவாதிகள் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல. என் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு

புறம்பானவை என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் கண்டுள்ள எதிர்வாதத்தின்படி யாதொரு சங்கதிகளும் உண்மையில் இல்லை என்றால் சரியல்ல. நான் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தூண்டுதலின் பேரில் பெயரளவிற்கு எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

**5,6,8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில்**

வழக்குரை மற்றும் இந்த பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள விபரத்தை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. வழக்கில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்கள், உரிமை மாற்றங்கள் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த வெள்ளப்பாண்டிக்கு சொந்த ஊர் மறுக்காலங்குளம் ஆகும். தற்போது ராஜபாண்டியில் வசித்து வருகிறார். வா.சா.ஆ 15 ஆவணத்தில் வாரிசு சான்று இணைக்கவில்லை என்றால் சரிதான். வெள்ளப்பாண்டி தேவருக்கு எத்தனை மனைவி என்றால் ஒரு மனைவி, 3 பிள்ளைகளும் உள்ளார்கள். இறந்து போன வெள்ளபாண்டிக்கு 1,2 பிரதிவாதிகள் மட்டும் வாரிசுகள் என்றும், 3 ம் பிரதிவாதி வாரிசுகள் இல்லை என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் மட்டும் வாரிசாக இருப்பதால் ராமு அம்மாளுக்கு கிரையம் கொடுத்த 19.2.1972 தேதியிட்ட கிரைய ஆவணத்தில் மைனராக காண்பித்து கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால்சரியல்ல. வெள்ளப்பாண்டியின் இறப்பு சான்று மறுக்காலங்குளத்தில் வாங்கப்பட்டதா என்றால் இல்லை. வெள்ளப்பாண்டிக்கு 1 ,2 பிரதிவாதிகள் வாரிசுகள் என்பது மறுக்காலங்குளத்தை சேர்ந்த ஊர் மக்களுக்கு தான் நேரடியாக தெரியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மறுக்காலங்குளம் கிராம நிர்வாக அதிகாரி கொடுத்த வாரிசு சான்று மோசடியானது என்றால் சரியல்ல. சுப்பையா தேவரின் உடன்பிறந்த சகோதரர்கள் 5 ஏக்கர் சொத்தை 4 பங்காக பிரித்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. ஏற்கனவே ராமு அம்மாள் கிரையம் பெற்று அவரிடம் இருந்து பேச்சியம்மாள் கிரையம் பெற்று 5 முதல் 7 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 1 ஆவணம்

மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சம்பந்தமான ஆவணங்கள் 1968 முதல் 1973 வரையுள்ள ஆவணங்கள் அதை மறுத்து கூற இயலாது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ். முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி (முழு பொ)
தென்காசி.